அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை கடிதம் : 02/2023

எனது இலக்கம் : EST-6/04/LON/1040(ii)
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.

2023.12.21

அமைச்சின் செயலாளர்கள்
மாகாண பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

## சொத்துக் கடன் பெறல் தொடர்பான தகவல்களை தனிப்பட்ட கோப்பில் உட்சேர்த்தல்

தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் துணைப்பிரிவு 11:10:2 மற்றும் 2016.05.20 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 09/2016 இன் மூலம் திருத்தப்பட்ட அவ் அத்தியாயத்தின் துணைப் பிரிவு 11:8:8 இன் மீது உங்கள் கவனத்தை ஈர்க்கிறேன்.

02. வங்கிகளின் மூலம் சொத்துக் கடன் பெற்றுள்ள அரச உத்தியோகத்தரொருவர், சேவைக் காலத்தில் இறந்தாலோ, பூரண அங்கவீனத்துக்கு ஆளானாலோ அல்லது மருத்துவக் காரணங்களால் ஓய்வுபெறச் செய்யப்பட்டாலோ, அந்தத் திகதியில் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகையை மட்டும் கடன் உத்தரவாத நிதியத்தின் மூலம் வங்கிக்கு ஒரு தடவையில் செலுத்தி முடிக்க அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும், சம்பந்தப்பட்டட கடன் நிலுவைத் தொகையைத் முடிப்பதற்கு அத்தியவசியமாக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள், நிறுவனங்களால் சரியாக அனுப்பப்படாமையினால் கடன் தொகையினை முடிப்பதற்கு தாமதமாகும் சந்தர்ப்பங்கள் மற்றும் உத்தியோகத்தரொருவர் இடமாற்றமாகும்போது சொத்துக் கடனைப் பெறுவது தொடர்பான தகவல்களை இற்றைப்படுத்தி புதிய சேவை நிலையத்துக்கு விரைவாக அனுப்பாமையின் காரணமாக கடன் தொகை தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தாமதம் ஏற்படும் சந்தர்ப்பங்கள் நிலவுவதாக ஒப்படை முன்வைக்கப்பட்டுள்ளது.

03. மேற்கூறிய குறைபாடுகளினால் ஏற்படும் தாமதங்களைத் தவிர்ப்பதற்காக, கீழ்க்கண்டவாறு செயற்படுமாறு உங்களுக்கு கீழ் உள்ள அனைத்து நிறுவனங்களின் தலைவர்களுக்கும் அறிவிக்குமாறு தெரிவித்துக் கொள்கிறேன்.

(அ) சொத்துக் கடன் பெறுவது தொடர்பான ஆவணங்களை இற்றைப்படுத்தி பராமரிக்க வேண்டும்.

(ஆ) கடன் விண்ணப்பம் மற்றும் கடன் தவணைக்கொடுப்பனவு பற்றிய தகவல்கள் தனிப்பட்ட கோப்பில் சேர்க்கப்பட வேண்டும்.

(இ) ஒரு உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் செல்லும்போது, தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXIV இன் துணைப் பிரிவு 11:10:2 இன் படி, 25ஆம் பின்னிணைப்புக்கேற்ப உரிய தகவல்களை புதிய சேவை நிலையத்திற்கு விரைவாக அனுப்பி அதன் பிரதியொன்றை தனிப்பட்ட கோப்பில் சேர்க்க வேண்டும்.

(ஈ) கடன் உத்தரவாத நிதியத்தின் மூலம் கடன் நிலுவையை தீர்க்கும் சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்களை சரியாக அனுப்ப வேண்டும்.

ஒப்பம்./ கே.டீ.என். ரஞ்சித் அசோக
செயலாளர்
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

தொலைபேசி இலக்கம் : 0112-699399
தொலைநகல் இலக்கம் : 0112-692158
மின்னஞ்சல் முகவரி : ade-vi@pubad.gov.lk